# விடியல்

The Dawn

*மாத இதழ், பொழுது – 26*
*ஜூன், 2011*

*vidiyalmagazhine.blogspot.com*
*vidiyalmagazhine@gmail.com*

*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
***www.ksrcasthamizh.blogspot.com***
***www.ksrcas.edu***

# உள்ளடக்கம்

## குறுங்கட்டுரைகள்

*பிற நாட்டவர் பார்வையில் இந்தியா* 02
*ஈழு ஈமு கோழிகள்* 03, *சுதந்திரச் சங்கு* 04
*சாக்லேட்* 06, *பழங்கள்* 09,
*மராட்டி மொக்கு* 07,
*சில கண்டுபிடிப்புகள்* 07,
*அகத்திக்கீரை* 07,
*கனவெனப்படுவது* 09, *சிறுநீரகம்* 11,
*சாதியும் பூதமும்* 15, *பூகம்பம்* 18

## கவிதைகள்

*தீவிர(வ)ாதம், செயல்* 02
*சமூகத்தின் தவறு* 06
*தாலாட்டுப் பாடம்மா* 08

## மாதம் ஒரு படைப்பாளர்

*எழுத்தாளர் புதுமைப்பித்தன்* 12

## தொடர் கட்டுரை – 06

*நெஞ்சுவலி, காய்ச்சல் - தீர்வுகள்* 19

## தொடர் செய்யுள் – 10

*கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்* 20

▼

| *பின் அட்டை ஓவியம்* |
|---|
| சௌந்தர்யா<br>இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை |

பிற நாட்டவர் பார்வையில்

# இந்தியா

"நாம் இந்தியர்களுக்குக் கடன் பட்டிருக்கிறோம். எவ்வாறு எண்ணுவது என்று கற்பித்தவர்கள் அவர்கள். அவ்வாறு கற்பித்திருக்காவிட்டால் எந்த வித அறிவியல் கண்டுபிடிப்புகளும் இல்லாமல் போய்விடும்."

***– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.***

"இந்தியா மனித இனத்தின் தொட்டில், மனிதப் பேச்சின் பிறப்பிடம், சரித்திரத்தின் தாயகம், நினைவுச் சின்னங்களுக்கு மூதாட்டி, மனித வரலாற்றின் விலை மதிக்க முடியாத சுவடுகள் இந்தியாவில் தான் உள்ளன."

***–மார்க் ட்வைன்.***

"உலகில் ஓரிடத்தில் மனிதர்களின் கனவெல்லாம் நனவானது என்று எடுத்துக் கொண்டால் அவ்விடம் நிச்சயமாக இந்தியாவாகத்தான் இருந்திருக்கும்."

***– ரொமைன் ரோலன்ட்***

"சீனாவை 20 நூற்றாண்டுகளாகப் பண்பாட்டு அடிப்படையில் இந்தியா ஒரு வீரனையும் எல்லை தாண்டி அனுப்பாமல் வெற்றி கொண்டுள்ளது."

***- ஹீசை.***

***தொகுப்பு – பி. சுதா, முதலாண்டு கணினி அறிவியல் ஆ பிரிவு.***

▼

**கவிதைகள்**

# தீவிரவ(ா)தம்

*"மேகங்கள் மோதினால் மழை*
*மலர்கள் மோதினால் தென்றல்*
*கைகள் மோதினால் ஓசை*
*உதடுகள் மோதினால் மௌனம்*
*வண்ணங்கள் மோதினால் ஓவியம்*
*எண்ணங்கள் மோதினால் கவிதை*
*பாறையில் உளி மோதினால் சிற்பம்*
*ஒலிகள் மோதினால் மொழி*
*உண்மை அன்பு மோதினால் நட்பு*
*இவை அனைத்தும் இன்பத்தின் வாசல்.*
*தீய எண்ணம்கொண்ட மனிதனின்*
*செந்நீர் மோதலினால் பிறக்கும்*
*கண்ணீரின் வாசகம் தீவிரவாதம்.*
*அதைமட்டும் தீவிரமாக*
*வதம் செய்வோம்!"*

**சு.தீபா,**
**முதலாண்டு ஆங்கில இலக்கியம்**

▼

# செயல்

*"மனிதா!*
*நீயும் கடிவாளம் கட்டிய*
*"குதிரையாய்" – ஓடிப்பார் உன்*
*இலட்சிய பாதையில.*
*உன் இலக்கு*
*உன் கையில் ஜொலிக்கும்*
*நிலக்கரி பிரித்த வைரமாய்....!"*

**இரா. கார்த்தி,**
**மூன்றாமாண்டு வணிகவியல்.**

▼

# ஈமு கோழிகள்

**கே.பிரேமலதா,**
முதலாண்டு கணிதம் 'அ' பிரிவு

ஈமு பறவையானது ஆஸ்தி ரேலியாவைத் தன் பிறப்பிடமாகக் கொண்டவை. இவை நெருப்புகோழி, கேசாவெரி, ரிக்கா மற்றும் கிவி போன்ற பறவைகளைப் போலவே பறக்கும் தன்மையற்ற வகையைச் சார்ந்த ராட்டைட் இனத்தைச் சேர்ந்தவை. ஈமு உலிகலேயே இரண்டாவது மிகப்பெரிய பறவையாகும்.

ஈமூக்கள் எந்தச் சுற்றுப்புறச் சூழலுக்கும் பொருந்தி வளரக் கூடிய திடமான பறவையாகும். மிக வெப்பமான பகுதிகளில் மட்டுமல்லாமல் அனைத்து சூழ்நிலையிலும் வளரக்கூடியவை. பொதுவாக ராட்டைட் இனப் பறவைகளுக்கு வரும் நோய்கள் ஈமு கோழிகளுக்கு வருவதில்லை.

விலையுயர்ந்த பொருட்களாகிய ஈமு எண்ணெய், இறைச்சி, தோல், இறகுகள், முட்டை, ஓடு மற்றும் கால்நகம் ஆகியவற்றின் மூலம் வர்த்தகரீதியாக நல்ல வருமானம் கிடைப்பதால் அனைவராலும் விரும்பத்தக்கத் தொழிலாக ஈமு வளர்ப்பு உள்ளது.

விற்பனை வயதடைந்த ஈமூ சராசரியாக ஐந்து முதல் ஆறு லிட்டர் வரை எண்ணெயைத் தரும் திறனுடையது. ஈமூ எண்ணெயில் நிறைவுறாக் கொழுப்பு உள்ளது. இந்த எண்ணெயானது சருமப் பராமரிப்பு பொருட்களும், தேகத்தில் தடவக்கூடிய மூட்டுவலி நிவாரணத் தைலம் போன்றவை தயாரிப்பிலும் பயன்படுகின்றன.

ஈமூ இறைச்சியில் குறைந்த அளவே கொழுப்பு உள்ளது. 100 கிராம் ஈமூ இறைச்சியில் 23.3 கிராம் புரதம், 109 கிராம் கலோரி சத்து உள்ளது. ஐரோப்பாவிலுள்ள நவ நாகரிக அழகுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் ஈமுக்களிலிருந்து பெறப்படும் நகம் மற்றும் தோல் பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன. நம் நாட்டில் போதுமான அளவில் இறைச்சி விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தினால் அதிக அளவில் பணம் சம்பாதிக்க இயலும்.

ஈமூ குஞ்சுகள் பிறக்கும் போது 10 அங்குல உயரத்திலும் 350 முதல் 450 கிராம் எடையுடன் கருப்பு மற்றும் வெள்ளைக்கோடுகள் குஞ்சுகள் வளர வளர குறைந்து பழுப்பு மற்றும் கருப்பு நிற இறகுகள் உருவாகத் தொடங்கும். 3 மாதம் முடிந்த குஞ்சுகள் 4 முதல் 6

கிலோ எடை கொண்டதாக இருக்கும். நல்ல முழு வளர்ச்சியடைந்த பறவையின் கழுத்து மயில் நீல நிறத்திலும் அதன் தலையில் கருமை நிற இறகுப் பொங்ககளைக் கொண்டும் காணப்படும்.

உப உணவுப் பொருளான ஈமு எண்ணெய்யானது ஈமு பறவைகளின் கொழுப்பிலிருந்து பெறப்படுகிறது. பின்பு அவை சுத்திகரிக்கப்பட்டு பதப் படுத்தப்பட்ட எண்ணெயாக மாற்றப் படுகிறன. நல்ல வளர்ச்சியடைந்த ஈமு பறவையிலிருந்து 5 முதல் 6 லிட்டர் எண்ணெய் கிடைக்கும். ஒமேகா 3 மற்றும் ஒமேகா 6 கொழுப்பு அமிலங்களைக் கொண்ட ஈமு எண்ணெயானது நிறம், மணம், மற்றும் சுவை அற்றதாகும். சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான எண்ணெ யானது எப்போதும் சீர்கெடாது. எனவே மருத்துவத்துறைக்குப் பயன் உள்ளதாக அமைகிறது.

நன்கு ஊடுருவும் தன்மையுள்ள ஈமு எண்ணெயானது சிறந்த ஈரப்பதனியா தோதலை உலராமல் வைக்கவும் தோலுக்கு மிருதுவான மென்மைத் தன்மையை கொடுக்கவும், தோல் எதரிச்சலை போக்கவும் பயன்படுகிறது.

அவை மட்டுமல்லாமல் ஒவ்வாமை, வீக்கம், கட்டி, புண் ஆகியவற்றிற்கு எதிராகவும், சிறந்த செயலாற்றுத் திறன் படைத்தவை. வலிநீக்கித் தைலங்கள், அழகு சாதன தைலங்கள், சோப்புகள், தலைக்கு தேய்க்கும் எண்ணெய் ஷாம்புகள், வாசனைத் திரவியங்கள், தேக ஆரோக்கிய எண்ணெய் ஆகியவை தயாரிக்கவும் பயன்படும்.

தீக்காயம், கீலாய்டு, நீர்வடிதல், சொறி, சிரங்கு, படை, இரத்தம் கன்றிப் போதல், தசைவலி, மூட்டுவலி, மூட்டுவிறைப்பு மற்றும் நாள்பட்ட புண்களைக் குணப்படுத்தவும் ஈமு எண்ணெய் பயன்படுகிறது.

▼

# சுதந்திரச் சங்கு

**த. மதன்குமார்,**
முதலாண்டு கணினி பயன்பாட்டியல் ‘இ’ பிரிவு

**முன்னுரை**

இந்தியா எனது தாய்நாடு. இந்நாட்டில் சாதி, சமயம், மொழி ஆகியவற்றில் வேறுபாடுகள் இருப்பினும் அனைவரும் இந்தியர் என்பதில் ஒற்**றுமையுடன்** இருக்கிறோம். “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்பது பழமொழி. இப்பழமொழியின் கருத்திற்கேற்ப அக்கால அரசர்கள் ஒற்றுமையுடன் இல்லாததால் விளைந்தவையே அடிமைத்தனம், ஆக்கிரமிப்பு முதலியன.

## ஆரியர்களின் வருகை

மத்திய ஆசியாவிலிருந்து இந்தோ - ஐரோபியர்கள் இனப் பெருக்கத்தால் பல இடங்களுக்க குடி பெயர்ந்தனர். இவர்கள் பேசிய மொழி இந்தோ-ஐரோப்பிய மற்றும் சமஸ்கிருத மொழியாகும். இடம்பெயர்ந்த இந்தோ-ஐரோப்பியர்களில் ஒரு பகுதியினர் கைபர் கணவாய் வழியாக பஞ்சாபை அடைந்தனர். இவர்கள் ஆரியர்கள் என்றழைக்கப்பட்டனர். ஆரியர்கள் மேய்ச்சல் நிலங்களை நாடியே இந்தயாவினுள் நுழைந்தனர்.

## ஆரியர்களின் பண்புகள்

ஆரியர்கள் இயற்கை சீற்றங்களைக் கண்டு அஞ்சினர். பின்னர் இயற்கையே இறுதியில் துணையாகப் போற்றினர். இந்திரன், வருணன், வாயு, சூரியன், அக்னி போன்ற தெய்வங்களை வணங்கினர். இந்தியாவில் திராவிடர்கள் மட்டுமே முன்னர் வாழ்ந்து வந்தனர். ஆரியர்களின் வருகைக்கு பின்பு ஆயதிராவிடர்கள் என்ற பெயருடன் அழைக்கப்பட்டனர்.

## அயல்நாட்டவரின் வருகை

இந்தியா நாடு “பாலும் தேனும் பாயும் பகுதி” என்று சிறப்புடன் அழைக்கப்பட்டது. இச்சிறப்பினை அறிந்த ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக் காரர்கள் மற்றும் டச்சுக்காரர்கள் முதலானோர் வாணிபம் செய்யும் எண்ணத்துடன் இந்தியாவிற்குள் நுழைந்தனர். நமது நாட்டு வளங்களை கண்டு மேல்நாட்டவர் நமது நாட்டை அடிமைப்படுத்தினர். பின்னர், நமது நாடு சுரண்டலுக்கள்ளான நாடாகவும், அடிமைப்படுத்தப்பட்ட நாடாகவும் மாறியது. நம் நாட்டு மக்களின் பேச்சு உரிமை, எழுத்துரிமை முதலியன பறிபோயின. அயல்நாட்டு ஆடைகளை உடுத்த வேண்டுமென்ற சட்டம் கொண்டு வரப்பட்டது.

## விடுதலைப் போராட்ட தலைவர்கள்

நாட்டு விடுதலைக்காக தமது வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்கள் ஏராளம். காந்தியடிகள், நேரு, கப்பலோட்டிய தமிழன் முதலானோர் தலைமையில் ஏராளமான போராட்டங்கள் நடைபெற்றன. ஆங்கில அரசு உப்பிற்கு தடை விதித்ததை எதிர்த்து நடத்தப்பட்டதே “உப்புச் சத்தியா கிரகப் போராட்டம்” ஆகும்.

வெள்ளையர்களை எதிர்த்து “வெள்ளையனே வெளியேறு” போராட்டம் நடத்தப்பட்டது. மேலும் தமிழ் புலவர்கள் ஏலராளமானோர் சுதந்திர எழுச்சியூட்டும் பாடல்களை பாடினர். அவர்களில் பாரதியார் பாடிய பாடல்கள் மிகவும் எழுச்சி நிறைந்தவை. நாமக்கல்கவிஞரின் பாடல்களில் “கத்தியின்றி இரத்த

மின்றி" என்ற பாடல் மிகவும் உணர்ச்சிவசமாகக் கூறப் படுகிறது.

### சுதந்திர நாடு இந்தியா

ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் அகிம்சையையே ஆயுதமாகக்கொண்டு போராடி இந்தியர்கள் சுதந்திரத்தைப் பெற்றனர். இச்சுதந்திர நாள் ஆகஸ்ட் 15ஆம் நாள் 1947ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டது. இந்நாளையே நம் வருடந்தோறும் சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

### தற்போதைய இந்தியாவின் நிலை

சுதந்திரம் பெற்றதற்கு பிறகு நமது நாட்டில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. தற்போது இந்தியா மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. கல்வி, போக்குவரத்து, வணிகம், விளையாட்டு மற்றும் அரசியல் ஆகியவற்றிலும் நம் நாடு மிகவும் சிறந்து விளங்குகிறது. மேலும், நாட்டு மக்களின் நலன் கருதி தரைப்படை, விமானப்படை, கடற்படை, கடலோரக் கண்காணிப்புப் படை மற்றும் எல்லைக்காவற்படை முதலியன உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா வளர்ந்து வரும் நாட்டிற்கு ஓர் சிறந்த உதாரணமாகும்.

### முடிவுரை

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப் பெதற்கு" என்ற காலம் சென்று விட்டது. தற்போது விண்வெளியில் கூட பெண்கள் பணியாற்றுகின்றனர். அடிமைத்தனம் என்னும் கூட்டிற்குள் சிட்டுக் குருவியாய் அடைபட்டிருந்த மக்களை விடுவித்த தலைவர்களை என்றும் நினைவில் வைத்து போற்றுவோம்!! சுதந்திர நினைவின் சிறகுகளுடன் ஜெய்ஹிந்த்!!

▼

**கவிதை**

## சமூகத்தின் தவறு

ஏ. ராஜா, மூன்றாமாண்டு, டி.எப்.டி

"என்னைத் தவறானவள் என்று
இந்தச் சமூக மக்கள்
கூறுகிறார்கள் - என்
கணவர் இறந்த பின்னர்
என் குழந்தையைக் காப்பாற்ற
நான் வேலை கேட்டுச் சென்ற
அத்தனை இடத்திலும்
எனக்கு திறமை உள்ளதா
என்று பார்க்கவில்லை -
இளமை உள்ளதா என்று
பார்க்கிறார்கள்.

என் சோகத்தைக் கூறினாள் என்
தேகத்தைக் கேட்கிறார்கள்.
என் மகன் படிக்கப் பணம்
வேண்டும் அதற்கத்தான்
எனக்கொரு வேலை வேண்டும்.

இறந்து விடலாம் என்று நினைத்தேன்
என் மகன் எதிர்காலத்தை
இழந்து விடுவானே!
தவறான கண்ணோட்டமுள்ள
இந்தச் சமுதாய மக்கள்தானே
தவறானவர்கள்! - மனத்தை
நேசித்த சமூகத்தின் மத்தியில்
தேகத்தை சுவாசிக்கும்
கலாச்சாரம் எங்கிருந்து
வந்தது?"

▼

# சாக்லேட்

**வி.நவீன்**
இரண்டாமாண்டு உயிர் வேதியியல்

இனிப்பு வகையான சாக்லேட் கொக்கோ என்ற மரத்தில் இருந்து வரும் பழங்களின் விதையில் இருந்து தயாரிக்கப்படுகிறது.

இவற்றின் தீமை யாரும் அறியாத ஒன்று. அதிக அளவு சாக்லேட் சாப்பிடும் பொழுது எலும்ப தேய்ந்து அதன் வலிமை குறையும். இதை அதிகமாக சாப்பிடும் பொழுது இடுப்பு மற்றம் கால்பகுதியில் உள்ள எலும்பின் வலிமை குறையும்.

சாக்லேட்டில் அக்ஸிலேட் எனம் வேதிப்பொருள் உள்ளது. இது நமது உடலில் உள்ள கால்சியத்தின் அளவை குறைத்து எலும்பின் வலிமை குறையும். இவற்றை அதிகம் உண்ணும் பொழுது புற்றுநோய் மற்றும் சிறுநீரகக் கல் தோன்றும் வாய்ப்புள்ளது.

▼

# மராட்டி மொக்கு

***லோ. புனிதவள்ளி,***
***தமிழ்விரிவுரையாளர்***

அன்னாசிப் பூவை 'மராட்டி மொக்கு' என்பர். இப்பூவை உலர்த்தியபின் நன்றாக இடித்து மெல்லிய கண் உள்ள துணியில் சலித்துத் தூள் செய்து ஒரு சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

நாள்தோறும் சிறிதளவு எடுத்துக் காலையிலும் மாலையிலும் சாப்பிட்டுவர புளியேப்பம் நீங்கும். பலவீனத்தைப் போக்கும். அசீரணம், மாந்தம் முதலியவை சீர்பெறும்.

▼

## சில கண்டுபிடிப்புகள்

**முனைவர் மா. கார்த்திகேயன்,**
தமிழ்த்துறைத்தலைவர்

1.இரத்த ஓட்டம் - வில்லியம் ஹார்வி 1628
2.புற்றுநோய் - ராபர்ட் வெய்ன்பெர் 1982
3.மயக்கமருந்து - ஜேம்ஸ் சிம்ஸன் 1847
4.காலரா கிருமிகள் - ராபர்ட் கோச் 1877
5.நீரிழிவ நோய் - பேண்டிக் பெஸ்ட் 1921
6.போலியோ தடுப்பு மருந்து - ஆல்பர்ட் சாபின் 1854
7.ஸ்டெதஸ்கோப் - ரேனேலாக் 1819
8.அம்மை குத்தும் முறை - எட்வர்டு ஜென்னர்1796
9.நோய்தடுப்பு முறை - பெரிங் கிடா சாடோ1809
10.இரத்தம் உரைதல் - பால் எர்ல்ச் 1884
11.கருத்தடை மாத்திரை - பின்கஸ்1955
12.முதல் சோதனைக்குழாய் - ஸ்டெப்லா எட்வதாமஸ்1978
13.பென்சிலின் - அலெக்சாண்டர் பிளமிங்1928

▼

# அகத்திக் கீரை

**த. மதன்குமார்,**
முதலாண்டு கணினி பயன்பாட்டியல் 'இ' பிரிவு

அற்புதமான மருத்துவகுணம் கொண்டது அகத்திக்கீரை. அகத்தி என்றால் 'முதன்மை வாய்ந்தது' என்று பொருள். அகத்திக்கீரையை அகம் + தீ என்று பிரித்துப் பார்த்தால்' நமது அகத்தின் உள்ளே இருக்கம் உஷ்ணத்தை (தீயை) தணிக்கும் கீரை' என்று பொருளாகிறது.

## இருதய படபடப்பு நீங்க

அகத்திப் பூவை, பாசிப்பருப்போடு சேர்த்து,கூட்டு வைத்து மதிய வேளையில் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு சாப்பிட்டு வந்தால் படபடப்பு நீங்கி சமானமாகும்.

## மூளைக் கோளாறுகள் நீங்க

மூளைப் பகுதியில் சிறுகோளாறு ஏற்பட்டால், சோம்பல், புத்திமந்தம், புத்தி தடுமாற்றம், நினைவாற்றல் குறைவு போன்ற நோய்கள் ஏற்படும். இந்தக் கோளாறுகளை நீக்க அடிக்கடி அகத்திக்கீரையை, வெள்ளைப் பூண்டுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் போதும் மேற்கண்ட கோளாறுகள் நீங்கும்.

## குடல் சுத்தமாக

அகத்திக் கீரையை வேகவைக்கும் போது மிகுதியாகும். அகத்தி நீரை குடித்து வந்தால் குடல் சுத்தமாகம்.

## அகத்தியால் தீரும் வியாதிகள்

- சொறி, சிரங்கு போன்ற அரிப்பு நோய்கள்
- பித்தம்
- உடல் உஷ்ணம்
- சளி, இருமல், ஜலதோஷம்
- அடிபட்ட வீக்கம்
- எலும்பு மெலிவு (அ)தேய்வு
- குடல்புண்
- பால் சுரப்பின்மை
- சிறுநீர் நோய்
- மூளைக்கோளாறுகள்
- மலச்சிக்கல்
- மார்புவலி
- இரத்தக் கொதிப்பு
- தொண்டைவலி, தொண்டைப்புண்
- காய்ச்சல்
- பெரியம்மை நோய் (வைசூரி)
- உடல்மெலிவு (சக்தியின்மை)
- தலைவலி
- இடுமந்தை (வசியம்) முறிக்கும் சக்தி கொண்டது.

▼

நெடுங்கவிதை

# தாலாட்டுப் பாடம்மா

**ச.கேசவன்,**
இரண்டாமாண்டு இயற்பியல் துறை

*"என்னாச மகனே*
*நீசெய்த தவமோ!*
*முன்சென்ற நாளில்*
*நான்பெற்ற வரமோ!*
*இந்நாட்டில் பிறந்து*
*பெருமை எனபெற்றோம்!*

*தமிழாலே வாயசைத்து*
*நான்பாடும் பாட்டு !*
*உன்குருதிக்குள் புகுந்து*
*குடியேற வேணும்!*
*அம்மா வென்றழைத்ததும்*
*நான்சிலிர்க்க வேணும்!*
*தன்னாலே கண்ணீர்*
*தான்பெருக வேணும்!*
*தாய்ப்பாலை ஊட்டி*
*நான்வளர்க்கும் வேலை:*
*தமிழ்ப்பாலை பருகி*
*நீவளர வேணும்!*
*தாய்ப்பாலோ சிலநாளில்*
*வற்றிவிடும் மகனே!*
*தமிழ்கடலோ என்னாளும்*
*வற்றிடாது மகனே!*

*என்துணையோ சிலஆண்டில்*
*முடிந்திடும் மகனே!*
*தமிழ்த்தாயோ பல்லாண்டு*
*துணைவருவாள் மகனே!*
*தமிழ்நாட்டின் பண்பாடு*
*மறவாதே மகனே!*
*தமிழனென்ற பெருமையோடு*
*நடைபோடு மகனே!*

*இவ்வுலக வாழ்க்கையெல்லாம்*
*விந்தையடா மகனே!*
*இரு சக்கரத்தில்*
*உருண்டோடும் மகனே!*
*இன்பதுன்ப மென்னும்*
*சரிபாதி மகனே!*
*நம்பிக்கை என்னும்*
*அச்சாணி கொண்டு*
*நழுவாது நீதினம்*
*நடைபோடு மகனே!*
*மறவாது புவியுலகம்*
*உன்னைப் போற்றும் மகனே!*

*நான்சுமந்த தெல்லாம்*
*மும்மூனு திங்களடா:*
*புவித்தாயோ சுமந்திடுவாள்*
*உன்னாயுள் முற்றுமடா!*
*என்பாதம் தொட்டுதினம்*
*நீ வணங்க தேவையில்லை.*
*பூங்காலை தினமும்*
*புவித்தாயை வணங்கடா!*
*தமிழ்த்தாயின் தாளை*
*நாவினில் ஏற்றடா!*

*பெரியோரை மதிக்க*
*மறவாதே மகனே!*
*வயதினில் சிறியோரை என்றும்*
*இகழாதே மகனே!*
*வாழ்க்கையின் ரகசியம்*

*தான்நிறைய உண்டு!*
*வாழ்ந்து தினம் பார்த்துதான்*
*நீ உணர முடியும்!*
*நிறைவாக உறங்கி*
*தெளிவாக எழுடா!*
*நீ பார்க்கம் பார்வையில்தான்*
*உலகஇன்பம் உள்ளதடா!"*

▼

# பழங்கள்

**எஸ்.சதாசிவம்**
இரண்டாமாண்டு, உயிரிதொழில்நுட்பவியல்

பொதுவாகவே அனைத்து பழ வகைகளிலும் எண்ணற்ற ஊட்டச் சத்துகள் உள்ளன.

சிலவகை நோய்களை குணப் படுத்தவும் பழங்கள் உதவுகின்றன. பழங்களில் ∴பீனைலேஸ் என்ற என்சைம் உள்ளது. ஆப்பிள் போன்ற பழங்களை வெட்டி சில நேரம் வைத்திருக்கும் போது அதன் நிறம் மாறுவதை நாம் பார்த்திருக்கின்றோம்.

அதற்கு பீனைலேஸ் என்ற என்சைம் காரணமாக அமைகிறது. ∴பீனைலேஸ் ஆக்ஸிஜனேற்றம் அடைந்து ஆர்த்தோ-குயினோன் என்ற பொருளாக மாறுகிறது. இது நச்சுத்தன்மை வாய்ந்தது.

இதனை உட்கொள்வதால் உடல் உபாதைகள் ஏற்படுகிறது. அதிகமானால் உயிரை எடுக்கவும் வல்லது. உடல் நிலை பாதிக்கப் பட்டவர்களுக்கு இது ஏற்றதல்ல.

▼

# சிறுநீரகம்

**முனைவர் மா. கார்த்திகேயன்,**
**முனைவர் ப. இராஜேஷ்**
**தமிழ்த்துறை**

மனித உயிர் நீடுழி வாழ சிறுநீரகத்தின் மகத்தான பணிகள் குறித்துக் காண்போம்.

மனிதனின் உடல் உறுப்புகளான மூளை, இதயம், தமனி, இரைப்பை, சிறுநீரகம், உணவுக் குழாய், நுரையீரல், கால், கை, நரம்புகள் ஆகியனவற்றைக் கூறலாம். இவைகளில் சிறப்பிடம் பெறுவது சிறுநீரகம் எனலாம். இன்றைய காலகட்டத்தில் பெரும்பான்மையாக மனிதர்களுக்கு ஏற்படும் நோய் சிறுநீரகம் மற்றும் இதய நோய் என்பர்.

இதற்குக் காரணம் உணவுமுறை என்கிறார் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள். எனவேதான் நம் முன்னோர்கள் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனம் முதுமொழியைப் பயன்படுத்தினர் போலும்.

பெண்பாற் புலவராகிய அவ்வை 'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' என்ற கூறுவதும் குறிப்பிடத்ததக்கது. மானிடராய் பிறந்த

பின்பு நோய் இல்லாமல் இருப்பது அதை விட அரிது எனலாம். மனிதர்களிடம் உள்ள சிறுநீரகத்தின் பணி மகத்தானது என்பர் ஆராய்ச்சியாளர்கள். ஒவ்வொரு மனிதனின் உடலுக் குள்ளும் ஒரு இரத்த ஆறு ஓடிக்கொண்டே இருக்கிறது எனலாம்.

ஒரு நிமிடத்திற்கு குறைந்தது ஐந்து லிட்டர் இரத்தம் உடலில் பாய்கிறது என்றும், இவற்றில் ஒன்றே கால் லிட்டர் இரத்தம் சிறுநீரகத்திற்கு போய்வருகிறது என்றும் ஆக, மனிதனின் உடம்பில் உள்ள சிறுநீரகத்திற்கு அதிகமான இரத்தம் தேவைப்படுவதை உணர முடிகிறது.

சிறுநீரகத்தில் உள்ள நெப்ரான்கள் ஒரு நிமிடத்தில் 125 மில்லி இரத்தம் ஆரம்ப நிலை சிறுநீர் பிரித்தெடுக்கிறது. அதாவது ஒரு நாளில் குறைந்தது நூற்றி ஐம்பது முதல் நூற்றி அறுபது லிட்டர் ஆரம்பநிலை சிறுநீர் வடிகட்டப்படுகிறது என்கின்றனர் மருத்துவர்கள்.இப்பணியை நெப்ரான்கள் செய்யாமல் அடம் பிடித்தால், மனிதர்கள் ஒவ்வொருவரும் எப் பொழுதும், எல்லா இடங்களிலும் சிறுநீர் கழித்துக்கொண்டே இருக்க வேண்டியது தான்.

சிறுநீரகத்தில் சிறுநீரைக் கட்டுப் படுத்துவது நெப்ரான்களின் பங்களிப்பு எனலாம். இது அதிகமாக வேலை செய்கிறது. காரணம் என்னவெனில் சில மனிதர்கள், சிலநாட்களில் மட்டன், சிக்கன், முட்டை, பிரியாணி, தயிர்சாதம், லெமன்சாதம் என ஒன்றும் விடாமல் அளவுக்கு அதிகமான உணவு முறைகளைக் கையாண்டு வருகின்றனர். சில நாட்களில் அளவுக்கு குறைவான உணவு முறைகளை கையாளுகின்றனர்.

மனிதன் அதிகம் சாப்பிடும் போதும், உணவு குறைவாக சாப்பிடும் போதும், சிறுநீரகத்தில் நெப்ரான்கள் கடினமாக உழைக்க வேண்டி யிருக்கும். உடலுக்குத் தேவையான சக்தியைத் தன் சேமிப்பில் இருந்து கொடுப்பது சிறுநீரகத்தின் சிறப்பான பணி எனலாம். எனவேதான், மருத்துவர்கள் சிறுநீரகத்தை 'ஒரு சுத்திகரிப்புத் தொழிற்சாலை என்றும் அழைத்து வருகின்றனர்.


சிறுநீரகம் சிறப்படைய தினமும் இரண்டு லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்தால் சிறுநீரகம் தன்னுடைய பணியைச் செவ்வனே செய்யும் என்றும், சிறுநீரக நோயில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனலாம்.

▼

# புதுமைப்பித்தன்

**முனைவர் ப. சரவணன்,**
தமிழ்த்துறை விரிவுரையாளர்

புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயர் கொண்ட சொ. விருத்தாசலம் ஏப்ரல் 25, 1906ஆம் நாள் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். தொடக்கக் கல்வியைச் செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் பயின்றார். தாசில்தாராக பணி புரிந்த அவர் தந்தை ஓய்வு பெற்றமையால், 1918இல் அவரது சொந்த ஊரான திருநெல்வேலிக்குத் திரும்பினார். அங்குள்ள ஆர்ச் யோவான் ஸ்தாபனப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். பின்பு நெல்லை இந்துக் கல்லூரியில் இளங்கலைப் (பி. ஏ) பட்டம்பெற்றார். 1932 ஜுலையில் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த கமலாவை மணந்தார்.



இவரது முதல் படைப்பான 'குலோப்ஜான் காதல்' காந்தி இதழில் 1933இல் வெளிவந்தது. 1934இலிருந்து மணிக்கொடியில் இவரது படைப்புகளும் பிரசுரமாகத் துவங்கின. மணிக்கொடியில் வெளிவந்த முதல் சிறுகதை ஆத்தங்கரைப் பிள்ளையார். இந்த காலகட்டத்தில் அவர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். இவர் வாழ்ந்த இடங்களான திருநெல்வேலியையும் சென்னையையும் மையமாகக் கொண்டே இவரது படைப்புகள் அமைந்தன. இவரது சிறுகதைகள் கலைமகள், ஜோதி, சுதந்திரச் சங்கு, ஊழியன், தமிழ்மணி, தினமணியின் ஆண்டு மலர், நந்தன் ஆகிய பத்திரிக்கைகளிலும் பிரசுரமாயின.

1940இல் புதுமைப்பித்தனின் கதைகள் என்ற அவரது சிறுகதைத் தொகுப்பு வெளியானது. சென்னையிலிருந்த காலத்தில் இவர் ஊழியன், தினமணி, மற்றும் தினசரியிலும் பணிபுரிந்தார். இவர் திரைப்படத் துறையிலும் ஆர்வம் செலுத்தினார். ஜெமினி நிறுவனத்தின் அவ்வை மற்றும் காமவல்லி படங்களில் பணிபுரிந்தார். பின்பு திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான 'பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்'யைத் துவங்கி 'வசந்தவல்லி' என்ற படத்தைத் தயாரிக்கும் விபரீத முயற்சியிலும் இறங்கினார். முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. எம். கே. தியாகராஜ பாகவதரின் ராஜமுக்தி திரைப்படத்திற்கு

வசனம் எழுதுவதற்காக புனேவில் சில மாதங்கள் வாழ்ந்தார். அங்கு அவர் கடுமையான காசநோய்க்கு ஆளாகி மே 5, 1948இல் காலமானார்.

புதுமைப்பித்தன் எழுத்துப்பணியில் முழுவீச்சில் ஈடுபட்டது 15 ஆண்டு களுக்கும் குறைவான காலம் தான். அக்குறுகிய கால அளவிலேயே அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையுள்ள கட்டுரைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், புத்தக விமரிசனங்கள் என எழுதிக் குவித்தார். அவரது எழுத்துக்கள் அவரைப் புரட்சி எழுத்தாளராக அடையாளம் காட்டின. அவர் கையாண்ட வி'யங்களும் கதாபாத்திரங்களும் தமிழ்ப் புனைவு உலகுக்குப் புதியதாய் அமைந்தன. தமிழ் இலக்கிய உலகம் சில எழுதப்படாத விதிகளால் முடக்கப்பட்டிருப்பதாக அவர் கருதினார்.

புதுமைப்பித்தனின் சிறுகதைகள்தான் அவருக்கு எழுத்துலகில் தனி இடத்தை அளித்தன. அவர் எழுதியதாகக் கணிக்கப்படும் 108 சிறுகதைகளில் 48 கதைகள்தான் அவர் காலத்திலேயே வெளியிடப்பட்டன. அவரது சிறுகதைகள் மணிக்கொடி, கலைமகள், ஜோதி, சுதந்திரச் சங்கு, ஊழியன், தமிழ்மணி, தினமணியின் ஆண்டு மலர், நந்தன் ஆகிய பத்திரிக்கைகளில் பிரசுரமாயின மற்றவை அவர் மறைவுக்குப் பின்னர் வெவ்வேறு காலங்களில் பிரசுரமாயின. கடைசித் தொகுப்பு 2000இல் வெளியானது. புதுமைப்பித்தன் 1930களில் உருவாகிய மணிக்கொடி இயக்கத்தின் முக்கிய எழுத்தாளர்களுள் ஒருவராக விளங்கினார். கு. ப. ராஜகோபாலன், பி. எஸ்.ராமையா, வ. ராமசாமி ஆகியோர் மணிக்கொடி இயக்கத்தின் மற்ற புகழ்பெற்ற எழுத்தாளர்களாவர்.

அவர் 50க்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துள்ளார். அவர் மொழிபெயர்த்த எழுத்தாளர்களில் சிலர்: மொலியர், கே பாயில், மேக்சிம் கார்க்கி, சின்கிளெயர் லூயிஸ், எர்னஸ்ட் டோலர், வில்லியம் ஷேக்ஸ்பியர், இ. எம். டேலா·.ப்ல்டு, வில்லியம் சரோயன், இ. வி. லூகாஸ், மோஷேஸ்மிலான்ஸ்கி, ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்ஸன், பிரட் கார்ட், ஜான் கால்ஸ்வொர்த்தி, அலெக்ஸாண்டர் குப்ரின், ஆன்டன் செக்கோவ், பிராண்ஸ் கா·.ப்கா, இல்யா எக்ரன்பர்க், கை டி மாப்பாசான், வலெரி பிர்யுசொவ், அனாடோல் பிரான்ஸ், லியோனிட் ஆண்டிரியேவ், ஹென்ரிக் இப்சன், நாத்தேனியல் ஹாத்தோர்ன், எட்கர் ஆலன் போ, ராபர்ட் முரே கில்கிரிஸ்ட், பிரான்ஸிஸ் பெல்லர்பி, லியோனார்ட் ஸ்ட்ராங், ஜேக் லண்டன், பீட்டர் எக்கி, மிக்கெயில் அலெக்ஸாண்ட்ரோவிச் ''ோலோகோவ், தாமஸ் வுல்·.ப் மற்றும்

ஜேம்ஸ் ஹேன்லி ஆவர். அவருக்கு மொழிபெயர்ப்புகள், தழுவல்கள் குறித்து தெளிவான கருத்து இருந்தது. தழுவல்கள் இலக்கியத் திருட்டுக்குச் சமம் என்றும் பிறமொழி படைப்புகளைத் தமிழுக்குக் கொண்டுவர மொழிபெயர்ப்பே சிறந்த வழியெனவும் கருதினார். 1937இல் மொழிபெயர்ப்பா, தழுவலா என்ற பிரச்சனையில் அவருக்கும் ‘கல்கி’ கிருஷ்ணமூர்த்திக்கும் இடையே காட்டமான இலக்கியச் சண்டையொன்று நிகழ்ந்தது.

புதுமைப்பித்தன் 15 கவிதைகள் எழுதியுள்ளார். அவரது முதல் கவிதையான திரு ஆங்கில அரசாங்க தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம், 1934இல் வெளிவந்தது. அவரது கவிதைகள் பெரும்பாலும் அவரது நண்பர் தொ. மு. சிதம்பர ரகுநாதனுக்கு வெண்பா வடிவில் எழுதப்பட்ட கடிதங்களாக அமைந்திருந்தன. அவரது 15 கவிதைகளும் அவர் இறந்த பின்பு தான் பிரசுரமாயின.

அவரது சிறுகதைகளைப்போலவே அவரது கவிதைகளும் நையாண்டியும், நக்கலுமாக இருந்ததன. ‘மூனாவருணாசலமே மூடா’, அவரது கவிதைகளுள் பிரசித்தமானது. அது மணிக்கொடி இயக்கத்தைப்பற்றி குறிப்பிடாமல் விட்டுவிட்ட ஒரு தமிழ் புத்தகத்தினைச் (மு. அருணாசலத்தின் இன்றைய தமிழ் வசன நடை) சாடும் விமரிசனமாக எழுதப்பட்டிருந்தது.

புதுமைப்பித்தன் அடிப்படையில் சோசியலிச கருத்துகளைக் கொண்டவர். அவரது அரசியல் கட்டுரைகள் மற்றும் புத்தகங்களில் குறிப்பிடத்தக்கவை நான்கு. அவை ∴பாசிஸ்ட் ஜடாமுனி, (முசோலினியின் வாழ்க்கை வரலாறு) கப்சிப் தர்பார், (ஹிட்லரின் வாழ்க்கை வரலாறு) ஸ்டாலினுக்குத் தெரியும் மற்றும் அதிகாரம் யாருக்கு (இரண்டும் கம்னியூசத்தையும் ஸ்டாலினின் கொள்கைகளையும் விவரிப்பவை). நான்கு புத்தகங்களுமே ∴பாசிசத்தை எதிர்த்தும் ஸ்டாலினிய கொள்கை களுக்கு ஆதரவாகவும் எழுதப்பட்டன.

சென்னை, தஞ்சாவூர்த் தமிழ் அல்லாது பிற வட்டார வழக்குத் தமிழில் எழுதிய முதல் எழுத்தாளர் புதுமைப்பித்தன். பெரும்பாலும் இவரது கதாபாத்திரங்கள் நெல்லைத் தமிழில் பேசினர். அவரது கதைகள் அவர் வாழ்ந்த இடங்களான சென்னை மற்றும் திருநெல்வேலியைக் களமாகக் கொண்டிருந்தன.

அவரது நடையில் பேச்சுத்தமிழ் மற்றும் செந்தமிழ் இரண்டும் கலந்திருந்தன. சிக்கலான வி'யங்களைக் கையாளும்போது கூட அவரது எழுத்துக்களில் நையாண்டி இழைந்தோடுவது அவரது சிறப்பு.

‘கல்கி’ கிருஷ்ணமூர்த்தி போன்ற இலக்கிய எதிராளிகளுடன் விவாதம் செய்தபோது கடுஞ்சொற்களைப் பயன்படுத்தினார். நூல் விமரிசனங்களில் வசைபாடல்களையும் எழுதியுள்ளார்.

நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடியாக இவர் கருதப்படுகிறார். கூரிய சமூக விமர்சனமும் நையாண்டியும், முற்போக்குச் சிந்தனையும், இலக்கியச் சுவையும் கொண்ட இவருடைய படைப்புகள், இவரின் தனித்தன்மையினை நிறுவுகின்றன. இவரது படைப்புகள் தமிழ் இலக்கியத்தில் மிகவும் அதிகமாக விவாதிக்கப்பட்டுள்ளன. 2002இல் தமிழக அரசு இவரது படைப்புகளை நாட்டுடமை ஆக்கியது.

புதுமைப்பித்தன் 108 சிறுகதைகளை எழுதியுள்ளார். பிறமொழிச் சிறுகதைகள் 57 யைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

புதுமைப்பித்தனின் படைப்புகள் முழுவதும் மின்னூலாக பி.டி.எப். வடிவிலும் குந்தகட்டிலும் தற்போது கிடைக்கப் பெறுகின்றன.

***சிறுகதைகள் - 108,***
***மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் - 57,***
***கவிதைகள் - 19,***
***புதினங்கள் - 4,***
***நாடகங்கள் - 3,***
***கட்டுரை நூல்கள் - 4,***
***கட்டுரைகள் - 34,***
***கடிதங்கள் - 88.***

http://www.gowthampathippagam.com/cds/ppncd.html என்ற இணையதளத்தில் இவற்றைப்பெற இயலும்.

▼

# சாதியும் பூதமும்

**கீர்த்தனா**
இளங்கலை இயற்பியல் முதலாண்டு

இந்தியாவில் உள்ள சாதிகளை எண்ண முடியாமல் திணரும் பூதத்தின் கதையைக் கூறிச் சென்னை ராமகிருஷ்ண மிஷன் பள்ளியில் பதினொன்றாம் வகுப்புப் பயிலும் ஹரிஹரன் என்ற மாணவன் முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களின் மனத்தைக் கவர்ந்தான்.

## ஹரி சொன்னகதை:

பூமியைக் காண கடவுள் நேரில் வந்தார். அப்போது அங்கே வந்த ஒரு பூதம் இந்தியாவை ஆட்சி செய்ய விரும்புவதாகக் கடவுளிடம் கூறியது. அதற்கு மூன்று நிபந்தனைகளைக் கடவுள் விதித்தார். அதைப் பூதமும் ஏற்றுக் கொண்டது.

## முதல் நிபந்தனை:

வானத்தில் உள்ள நட்சத்தரங்களின் எண்ணிக்கையைச் சொல்ல வேண்டும் என்பது முதல் நிபந்தனை. நட்சத்திரங்களை எண்ணிப் பார்த்து ஒரு வாரத்தில் பதில் சொன்னது பூதம்.

## இரண்டாம் நிபந்தனை:

பூமியில் உள்ள மணல் துகள்களின் எண்ணிக்கையைச் சொல்ல வேண்டும் என்பது இரண்டாவது நிபந்தனை. அதனையும் ஒரு மாதத்தில் எண்ணிப் பார்த்து ஒரு மாதத்தில் பதில் அளித்தது பூதம்.

### மூன்றாவது நிபந்தனை:

இந்தியாவில் எத்தனைச் சாதிகள் மற்றும் சாதிக் கட்சிகள் உள்ளன என்று சரியாகச் சொல்ல வேண்டும் என்பது கடைசி நிபந்தனை. அவற்றை எண்ணிப் பார்க்கப் புறப்பட்ட அந்தப் பூதம் இன்னமும் திரும்பி வரவில்லை.

அந்த அளவுக்கு இந்தியாவில் சாதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

இக்கதை குறித்து இந்திய மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும் என்பது எனது ஆதங்கம்.

இதனைப் பீகார் பயணத்தின் போது குழந்தைகளுக்குக் கூறிய கதை மற்றும் அது மட்டுமல்லாமல் குழந்தை பற்றிய அவரது கருத்து.

குழந்தையே உலகத்தின் முதல் விஞ்ஞானி என்றார் கலாம். குழந்தை பற்றிய அவரது கவிதை பீகாரில் வாசிக்கப்பட்டது.

“பாரத தேசமென்னும் பழம் பெரும் நாட்டின் சீரிய இதயமாய்ச் செழித்திடும் பீகாரில் பிறந்தேன் வளர்ந்தேன்- பின்னை நான் உணர்ந்தேன்! அறிந்தேன்! இது உத்தம புத்தன் உதிர்ந்த நாடு வர்த்தமானன் வழிகாட்ட வாழ்ந்திருந்த பிரதேசம் கோவிந்த குரு ஞானம் சொல்லி ஆலயம் கண்ட “பாட்னா” ஆழ்ந்து தெளிந்து சூரியப் பாதை சூட்சுமத்தைக் காட்டி அண்டம் கோள்கள் அனைத்தின் கோலம் அறியச் செய்தான் பாரீர்! கற்பதெங்கள் கடமை கற்றுத் தெளிவோம் வாரீர்! கங்கையெனும் நங்கை சிரித்துக் கழனி காணும் சோலை கவிதை கொள்ளச் செய்யும் இறையழகில் நிறைநிலமே - இங்கு கடவுள் துணை கொண்டு கடமையைக் கருத்தில் கொண்டு உழைப்பேன் உயர்வேனென உறுதி

கொள்ளுங்கள் மாணவர்களே!". அதாவது,

1.போர் மலிந்து கிடந்த காலத்தில் அஹிம்சையே வாழ்க்கை முறை" என்று சொன்ன புத்தரும்.

2.சகமனிதனுக்கு மட்டுமல்ல, சக உயிருக்கும் தீங்கு செய்யலாகாது என்று உயிர்நேசம் பேசிய இருபத்து நாலாவது தீர்த்தங்கரர் மகாவீரரும்

3.பதினைந்து நூற்றாண்டுக்கு முன்பே கோளின் சுழற்சி பற்றி அறிந்து (அ) அளந்து சொன்ன ஆரியப்பட்டரும்

4.கீழ்ச்சாதி மக்களென்று ஒடுக்கப்பட்ட ஐவரைத் தன் சீடர்களாக்கிச் சமத்துவம் பேணிய பத்தாவது சீக்கிய குரு கோவிந்த சிங்கும் நம் மண்ணிலே பிறந்தவர்கள் என்பதை உணர்ந்து நடைபோடுங்கள் பிள்ளைகளே! என்று நம்மை நம்பிக்கையாக உருவெடுக்கக் கூறியவர் அப்துல்கலாம்.

ஓர் இளைஞன் விஞ்ஞானிக்குமான பொதுக் குணங்கள் எவை தெரியுமா?

1.உலகை வியத்தல்

2.கேள்வி கேட்டல் (அ) எறிதல்

3.ரகசியம் அறிதல்

இக்குணங்களைப் பெற்று நாம் நம் நாட்டினை உயர்த்த பாடுபடுவோம்.

இத்தகைய கலாம் யார் என்பதை அறியச் செய்த சுதந்திர போராட்ட வீரர் மற்றும் முன்னாள் பிரதமர் ஆன அட்டல் பிகாரி வாஜ்பாய் அவருக்கும் தி வேல்டு ரீனவல், தி ஹிந்து ஆகிய இதழ் காரணமாக அப்துல் கலாம் அனைவராலும் கவரப்பட்டார்.

இத்தகைய சக்தி கொண்ட இளைஞர் சமுதாயம் இந்தியாவை உயர்த்த ஒவ்வொரு நாளும் உழைப்போம்.

# பூகம்பம்

என்.ரோஷக் பேகம்,
முதலாண்டு வணிகவியல்

பூகம்பம் என்பது பூமிக்கு அடியில் அழுத்தம் அதிகமாகி, அதனால் சக்தி வெளியேற்றப்பட்டு தளத்திட்டுகள் நகர்வதால், இடம்பெறும் அதிர்வாகும். இந்த அதிர்வை அளக்க பயன்படும் கருவி நிலநடுக்கமானி, (சீஸ்மோ மீட்டர்) 3 ரிக்டருக்கும் குறைவான நிலநடுக்கங்களை உணர்வது கடினம். பலத்த சேதங்களை ஏற்படுத்துபவை 7 ரிக்டர் அளவில் இருக்கும்.

பூமியின் மேற்பரப்பு பெரும் பாளங்களாக அமைந்துள்ளது. இவை நகரும் கட்டுகளாக உள்ளன. நிலப்பரப்பிலும், நீரின் அடியிலும் 7 பிளேட்டுகள் உள்ளன.

இவை மிகப்பெரியவை. அதே போல் 12 சிறிய அளவிலான தட்டுகளும் உள்ளன. 7 தட்டுகளில் தான் 5 கண்டங்களம் பசிபிக் போன்ற பெருங்கடல்களம் அமைந்துள்ளன.

இந்த தட்டுகள் 80 கிலோமீட்டர் வரை தடிமன் கொண்டவை. இதன் அடியில் பாறைகள் கொதிக்கம் குழம்ப நிலையில் இருக்கிறது. பூமியின் சுழற்சி வேகத்தில் இந்த பாறைக்குழம்பு நகர்வதால், மேலே உள்ள தட்டுகள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து செல்கிறது. இவை ஒரு ஆண்டில் ஒரு சென்டி மீட்டர் முதல் 13 சென்டி மீட்டர் வரை நகர்கிறது. இது புவியின் வேகத்திற்கு மிக சிறியதாக இருந்தாலும் இந்த பிளேட்டுகள் லேசாக உராயும்போது கூட பெரும் பூகம்பத்தை உண்டாக்கி விடகின்றன.

ஐரோப்பாவும், ஆசியாவும் இணைந்து நிலப்பரப்பாக காணப்பட்டாலும், இரண்டு தனித்தனி தட்டுகளில் தான் அமைந்துள்ளன. இந்தியா உள்பட தென்காசியப் பகுதியானது ஆசிய தட்டில் இல்லாமல் தனி கூட்டாக அமைந்துள்ளது. இதனால் தான் இந்தியாவை “துணைக்கண்டம்” என்று அழைக்கிறொம்.

அதிர்ச்சி அலைகள், தொடக்க அலை, இரண்டாவது அலை மற்றும் பூத்தள அலை என 4 நிலைகளில் பூகம்பம் உண்டாகிறது. சீஸ்மிக் போக்கஸ் என்பது இதன் ஆரம்ப பகுதி. இதைப் பொறுத்தே விளைவுகள் இருக்கும். பெரிய அளவில் நடக்கம் பூகம்பத்தின் போது அதன் தொடர்ச்சியாக சிறிய அதிர்வுகள் வரவ ாய்ப்புண்டு. கடலில் வரும் பூகம்பத்தை ‘சுனாமி’ என்கிறோம். பூகம்ப அறிவியல் ‘சீஸ்மோலாஜி’ எனப்படும்.

1556இல் சிலிநாட்டில் உள்ள வால்டிவியாவில் 9.5 ரிக்டர் அளவில் பதிவாகிய பூகம்பம்தான் உலகியேயே பெரியது 26.4.2004இல் இந்தியா உள்பட இந்தியப் பெருங்கடல், ஜாவா, இந்தோனேசியா போன்ற பகுதிகளில் பூகம்பம் ஏற்பட்டது.

இதுதான் இந்திய அளவில் ஏற்பட்ட பெரிய பூகம்பம். இது 9இல் இருந்து 9.3 ரிக்டர் அளவு வரை பதிவானது இதில் சுமார் 2 லட்சத்துக்கு 30 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் உயிர் இழந்தனர்.

இந்த ஆண்டில் மார்ச் மாதத்தில் ஜப்பானில் நடந்த பூகம்பத்தை யாரும் மறக்க முடியாது. இதன் அளவு 8.8 ரிக்டர்.

▼

# நெஞ்சுவலி, காய்ச்சல்
## சில தீர்வுகள்

முனைவர் **ப. இராஜேஷ்,**
தமிழ் விரிவுரையாளர்

நெஞ்சுவலி மற்றும் காய்ச்சல் நோய்க்கு இரண்டு விதமான மருத்துவமும், பலவகையான மருந்துப் பொருள்களும் பயன்படுத்தும் பழக்கம் உள்ளது.

**நெஞ்சுவலி:**

ஆடாதோடா செடியின் இலையைச் (ஐந்து) சிறிதாக நறுக்கி இதனுடன் சிறிதளவு தவிடு, இரண்டு தம்ளர் தண்ணீர் இரண்டையும் கலந்து கொதிக்க வைத்து அச்சாறினைத் துணியில் கட்டி நெஞ்சில் ஒத்தடம் இடுகின்றனர். இதற்குப் பத்தியம் உண்டு. தண்ணீர் குடித்தல் மற்றும் தண்ணீரால் நனைத்தல் கூடாது. எலுமிச்சம்பழச்சாறு, பசுவெண்ணெய் ஆகியவற்றை வெந்நீரில் கலந்து தினம் ஒரு நேரம் கொடுக்கின்றனர்.

**காய்ச்சல்:**

காய்ச்சல் நோய்க்கு வெள்ளைத் துணியைச் சூடுதண்ணீரில் நனைத்து நெற்றில் வைக்கின்றனர். குணமடையும் என்பர். இதற்குப் பத்தியம் உண்டு. தண்ணீர் குடித்தல் கூடாது. குப்பைமேனி இலைச் சாற்றினை எடுத்து ஐந்துதுளி முள்ளெலித் தைலத்தையும் சேர்த்துக் கொடுத்தால் காய்ச்சல்இம்மருந்துகள் அனைத்தும் உள்மருந்தாகவே கொடுக்கப் படவேண்டும்.

### இவை குறித்த அட்டவணை

| *மருத்துவம்* | *மருந்துப் பொருளின் அளவு* | *செய்முறை* | *கொடுக்கும் அளவு* | *காலம்* |
|---|---|---|---|---|
| | | ***நெஞ்சுவலி*** | | |
| ஆடாதேடாஇலை, தவுடு, தண்ணீர் | ஆடாதேடாஇலை ஐந்து, சிறிதளவு தவிடு, இரண்டு தம்ளர் தண்ணீர் | நறுக்குதல், அவித்தல் | ஒத்தடம் | மாலை |
| எலுமிச்சம்பழம், பசுவெண்ணெய் | ஒரு சங்கு அளவு, எலுமிச்சம் பழச்சாறு, சிறிதளவு வெண்ணெய் | - | ஒரு தம்ளர் அளவு | ஏதாவது ஒருநேரம் |
| | | ***காய்ச்சல்*** | | |
| வெள்ளைத்துணி, வெந்நீர் | இரண்டு தம்ளர் வெந்நீர் | நனைத்தல் | - | காலை, மாலை |
| குப்பைமேனி இலை, முள்ளெலி தைலம் | ஒரு பிடி குப்பைமேனி, ஐந்து துளி முள்ளெலி தைலம் | சாறு எடுத்தல் | ஒரு சங்கு | காலை, மாலை |

*தொடர்செய்யுள்:*

## கே.எஸ்.ஆர். பிள்ளைத்தமிழ்

பகுதி – 10 – சிறுதேர்

கவிஞர் ***திரு. மோ. ஆ. யுவராசா,***
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.



சிறுவனைச் சிறிய தேரை ஓட்டி விளையாட அழைப்பது சிறுதேர்ப்பருவம் ஆகும். சிறுவனின் 5ஆம் ஆண்டு முதல் 9ஆம் ஆண்டு வரை இது நிகழும். இங்குச் சிறுவராகப் பாவிக்கப்படுபவர் கே.எஸ்.ஆர் ஆவார்.

சின்னக் குழந்தாய்! சின்னக் குழந்தாய்!
சிறுதேர் நீயுருட்டே!
சிந்தா மணியே! நந்தா விளக்கே!
சிறுதேர் நீயுருட்டே !
பொன்னே! மணியே! புதுத்தேன் மலரே!
பூந்தேர் நீயுருட்டே !
பொய்யே பேசா மெய்யா! அய்யா!
புதுத்தேர் நீயுருட்டே!
தன்னே ரில்லா தங்கக் கனியே!
தனித்தேர் நீயுருட்டே!
தத்துவம் பேசம் வித்தக அறிஞா!
தகும்தேர் நீயுருட்டே!
மன்செங் கோட்டின் மைந்தா! ரெங்கா!
மணித்தேர் நீயுருட்டே!
மறையாப் பள்ளி நிறைவாய்த் தந்தாய்!
மலர்த்தேர் நீயுருட்டே!
கல்விதரும் செல்வியும் செல்வம்தரும் செல்வியும்
கல்விநகர் தன்னில் உள்ளார்
கணபதியும் முருகனம் கைலாசர் பார்வதியும்
காணில்உன் நகரில் உள்ளார்
பல்விதப் பட்டாடை பார்தணியும் பெருமாலும்
பாரில்நின் பெயரில் உள்ளார்
பத்மநிதி சங்கநிதி கொண்டுள குபேரனும்
பாங்கில்நின் அருகில் உள்ளார்
எல்லாவி தப்பொருளும் இருந்தாலும் உன்மனம்
இறைப்பொருளை நாடுதப்பா!
எப்பொருளும் ஞானமெனம் அப்பொருளுக் கீடில்லை
என்பதனை உணர்ந்து கொண்டாய்!
கல்லாமை என்கின்ற கலிதீர்க்கும் ரங்கனே!
கடுகிசிறு தேரை ஓட்டே!
கனிமனச் செல்வனே!
பணிமொழிப் பண்பனே!
கருதிசிறு தேரை ஓட்டே!